TAMILTH Kancheepuram 1 Regional_03 212045 HT33049

பரந்தூரில் கையகப்படுத்தப்படும் நிலங்களுக்கான விலை

ஏக்கருக்கு அதிகபட்சம் ரூ.2.51 கோடி வரை நிர்ணயம்

■ சென்னை

பரந்தூரில் விமான நிலையம் அமைக்க கையகப்படுத்தப்படவுள்ள நிலங்களுக்கு ஏக்கருக்கு ரூ.35 லட்சம் முதல் ரூ.2.51 கோடி வரை விலை நிர்ணயம் செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூரில் பசுமை விமான நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக, பரந்தூர் உள்ளிட்ட சுற்றியுள்ள 13 கிராமங்களில் 5,746 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் பணிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. விமான நிலையம் அமைக்க ஏகனாபுரம் உள்ளிட்ட சில கிராம மக்கள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தி வருகின்றனர். கையகப்படுத்தப்படும் நிலங்களுக்கு வழிகாட்டி மதிப்பை விட கூடுதல் தொகை வழங்க முன் வந்த அரசு, குழுவை அமைத்து பேச்சுவார்த்தை நடத்தியது.

இந்நிலையில், தொழில் நிறுவனம் மற்றும் முதலீட்டு துறை செயலர் அருண் ராய், நிலங்களுக்கான விலை நிர்ணய அரசாணையை வெளியிட்டுள்ளார். அதில் கூறியிருப்பதாவது:

பரந்துரில் பசுமை விமான நிலையம் அமைக்கும் திட்டத்துக்காக 3,774.01 ஏக்கர் தனியார் பட்டா நிலங்களும், 1,972.17 ஏக்கர் அரசு நிலங்களும் கையகப்படுத்த திட்டமிடப்பட்டது. தனியார் நிலங்களுக்கான விலையை நிர்ணயம் செய்வது தொடர்பாக அமைக்கப்பட்ட குழு பேச்சுவார்த்தை நடத்தி, பரிந்துரையை அரசுக்கு அனுப்பியது.

அதன்படி, வழிகாட்டி மதிப்பு ரூ.5லட்சம்முதல்ரூ.17லட்சம்வரை உள்ள நிலங்களுக்கு இழப்பீடு மற்றும் ஊக்க தொகையுடன் சேர்த்து ஏக்கருக்கு ரூ.35 லட்சம் முதல் ரூ.60 லட்சம் வரை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சதுப்பு நிலங்களும், வறண்ட நிலங்களும் வகைப்படுத்தப்பட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட 374.53 ஏக்கர் நிலத்துக்கு மட்டும் குறைந்தபட்ச தொகை ஏக்கருக்கு ரூ.40 லட்சத்தில் இருந்து ரூ.60 லட்சம் வரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

வழிகாட்டி மதிப்பு ரூ.17 லட்சத்துக்கும் அதிகமாக உள்ள 996 ஏக்கர் பரப்பு நிலங்களுக்கு ரூ.2.51 கோடி வரை ஏக்கருக்கு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதிகாரிகள் நிலங்களை கையகப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். இதை ஏற்றுக் கொள்ளாதவர்களின் நிலங்களை உரிய துறைகளின் மூலமாக மதிப்பீடு செய்து, அவர்களுக்கும் 100 சதவீதம் இழப்பீடு மற்றும் 25 சதவீத ஊக்கத் தொகை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

● உலக சுற்றுச்சூழல் தினமான நேற்று தாம்பரம் பகுதியில் உள்ள பச்சைமலை நோக்கி சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நடைபயணம் நடைபெற்றது. சுற்றுச்சூழல் மற்றும் விழிப்புணர்வு இயக்கம் சார்பில் நடைபெற்ற நிகழ்வில் மூத்த தொழிற்சங்க தலைவர் டி.கே.ரங்கராஜன், மருத்துவர் எஸ்.காசி, வழக்கறிஞர் திருமூர்த்தி, அமைப்பின் தலைவர் மோகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். படம்: எம்.முத்துகணேஷ்

விராட் விஸ்வகர்ம சேவாலயா அறக்கட்டளைபோல

பெண் கல்வி, வாழ்வாதார மேம்பாட்டுக்கு உதவ வேண்டும்

உயர் நீதிமன்ற நீதிபதி டி.வி.தமிழ்ச்செல்வி வேண்டுகோள்

■ சென்னை

விராட் விஸ்வகர்ம சேவாலயா அறக்கட்டளைபோல நாம் அனைவரும் பெண் கல்வி, ஏழை மகளிர் வாழ்வாதார மேம்பாட்டுக்கு உதவ வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி டி.வி.தமிழ்ச்செல்வி கூறினார்.

விராட் விஸ்வகர்ம சேவாலயா அறக்கட்டளை சார்பில், பத்மஸ்ரீ விருதுபெற்ற ஸ்தபதி தேவ.ராதாகிருஷ்ணனுக்கு பாராட்டு விழா சென்னை பெரியார் நகரில் நேற்று நடைபெற்றது. அறக்கட்டளை நிறுவனர் முனைவர் பிரம்மஸ்ரீ கே.பி.வித்யாதரன் தலைமை வகித்தார்.

சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி டி.வி.தமிழ்ச்செல்வி, ஸ்தபதி தேவ.ராதாகிருஷ்ணனை கவுரவித்தார். தொடர்ந்து, அறக்கட்டளை சார்பில் ஏராளமான பெண் பயனாளிகளுக்கு கல்வி, மருத்துவ உதவித்தொகை, கண் கண்ணாடி, தையல் இயந்திரங்களை வழங்கினார். பின்னர் நீதிபதி பேசியதாவது:

விராட் விஸ்வகர்ம சேவாலயா அறக்கட்டளை, பெண் குழந்தைகள் கல்விக்காகவும், ஏழை மகளிர் வாழ்வாதார மேம்பாட்டுக்காகவும் ஆண்டுதோறும் ஏராளமான உதவிகளை செய்து வருகிறது. இந்த அறக்கட்டளைபோல நாமும் ஏழை பெண்களின் கல்வி, வாழ்வாதார மேம்பாட்டுக்காக முடிந்த உதவிகளை செய்ய வேண்டும்.

● விராட் விஸ்வகர்ம சேவாலயா அறக்கட்டளை சார்பில் சென்னை பெரியார் நகரில் நடைபெற்ற விழாவில் பத்மஸ்ரீ விருதுபெற்ற ஸ்தபதி தேவ.ராதாகிருஷ்ணனை கவுரவித்தார் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி டி.வி.தமிழ்ச்செல்வி. உடன், அறக்கட்டளை நிறுவனர் முனைவர் பிரம்மஸ்ரீ கே.பி.வித்யாதரன், விஜயலட்சுமி வித்யாதரன், டாக்டர் வி.விஜயசந்தர் வித்யாதரன், தெய்வநாயகி ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர்.

ஸ்தபதி தேவ.ராதாகிருஷ்ணன் வடிவமைத்த சிற்பம் ஜி-20 மாநாட்டுக்கே பெருமையை தேடித் தந்தது. அதனாலேயே பத்மஸ்ரீ விருதும் அவரை தேடிவந்தது. நமது பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

ஜி-20 மாநாட்டில் சிலை

ஸ்தபதி தேவ.ராதாகிருஷ்ணன் பேசும்போது, "ஜி-20 மாநாட்டில் 40 அடி உயரத்தில் சிலை வைக்க வேண்டும். அதை பாரம்பரிய ஸ்தபதி ஒருவர்தான் செய்ய வேண்டும் என்று பிரதமர் மோடி விரும்பினார். நான் சிற்ப சாஸ்திர முறைப்படி, பாரதம், பாரதப் பிரதமர் என்ற சொற்களுடன், 27 அடி உயர நடராஜர் சிலையை அமைக்கப் பரிந்துரைத்தேன். அதை பிரதமர் ஏற்றுக் கொண்டார். அவர், கலைஞர்களின் தொழில் உரிமையை, பாரம்பரிய நடைமுறைகளை மதிப்பவர்" என்றார்.

அறக்கட்டளை நிறுவனர் கே.பி.வித்யாதரன் பேசும்போது, "முன்பு நல்ல நாள் பார்த்து, தோப்புக்குச் சென்று, ஆண் மரமா, பெண் மரமா என்று தேர்வு செய்து, வீடுகளுக்கு மரங்களை அறுப்பார்கள். அதனால்தான் அந்தக் காலத்து வீடுகளும், கோயில் கதவுகளும் நீண்டகாலம் உறுதியாக இருந்தன. அந்த வீடுகளில் வசிப்போரும் பல தலைமுறைகள் சிறப்பாக வாழ்ந்தனர். இன்று பட்டறையில் கிடைத்த மரங்களையும், ரெடிமேடு கதவுகளையும் பயன்படுத்துகின்றனர். திருமணத்துக்கு தாலியை ரெடிமேடாக வாங்கி அணிந்து கொள்கின்றனர். அந்தக் காலத்தில் நல்ல நாள், நேரம் பார்த்து, தங்கத்தை உருக்கி தாலி செய்ததால், அதை வாங்குவோரின் குடும்ப வாழ்க்கை சிறப்பாக இருந்தது. எனவே, நமது பாரம்பரிய மரபுகளை அனைவரும் கடைபிடிக்க வேண்டும்" என்றார்.

இந்த நிகழ்ச்சியில் தெய்வ நாயகி ராதாகிருஷ்ணன், விஜயலட்சுமி வித்யாதரன், டாக்டர் வி.விஜயசந்தர் வித்யாதரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

வியாசர்பாடி கணேசபுரம் மேம்பால பணி 40 சதவீதம் நிறைவு

மாநகராட்சி நிர்வாகம் பதில்

■ சென்னை

வடசென்னை வியாசர்பாடி பகுதியில் கணேசபுரம் ரயில்வே மேம்பாலப் பணி 40 சதவீதம் மட்டுமே நிறைவடைந்திருப்பதாக மாநகராட்சி நிர்வாகம் பதில் அளித்துள்ளது.

வியாசர்பாடி கணேசபுரம் ரயில்வே மேம்பாலப் பணி நீண்ட காலமாக முடிக்கப்படாமல் உள்ளது. இதனால் வாகன ஓட்டிகள் சிரமத்துக்குள்ளாகிறார்கள். எனவே பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்று வடசென்னை குடியிருப்போர் நலச் சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் டி.கே.சண்முகம், சென்னை மாநகராட்சி மேயரிடம் அண்மையில் மனு அளித்திருந்தார். இதற்கு பதில் அளித்து சென்னை மாநகராட்சி நிர்வாகம், டி.கே.சண்முகத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளது. அதில் கூறியிருப்பதாவது:

கணேசபுரம் மேம்பாலத்தின் தெற்கு பகுதியில் தூண்கள் அமைக்கும் பணி முடிவுற்று. தற்போது வடக்கு பகுதியில் ஆழ்துளைக் கடைக்கால்கள் அமைக்கும் பணி, சென்னை குடிநீர் வாரியத்தின் குடிநீர் மற்றும் கழிவுநீர்க் குழாய்களை மாற்றியமைக்கும் பணி மற்றும் நிலம் கையகப்படுத்தும் பணி ஆகியவை நடைபெற்று வருகின்றன.

தற்போது வரை 40 சதவீதம் பணிகள் முடிவடைந்துள்ளன. வடக்கு பகுதியில் நில எடுப்புக்கு பின்னரே அந்நிலத்தில், சென்னை குடிநீர் வாரியத்தின் குடிநீர் மற்றும் கழிவுநீர் குழாய்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும். எனவே, நில எடுப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 6 மாத காலத்துக்குள் இம்மேம்பாலப் பணி முடிக்கப்படும். இவ்வாறு பதில் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

நில எடுப்பு பணிகளை எவ்வளவு துரிதப்படுத்த முடியுமோ, அந்த அளவுக்கு துரிதப்படுத்தி மேம்பாலப் பணிகளை வேகமாக முடிக்க வேண்டும் என்று வடசென்னை குடியிருப்போர் நலச்சங்கங்களின் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

ஆன்லைன் வர்த்தகத்தில் இரட்டிப்பு லாபம் ஆசை காட்டி

தொழிலதிபரிடம் ரூ.2.26 கோடி மோசடி செய்த 4 பேர் கும்பல் கைது

மூளையாக செயல்பட்ட வெளிநாட்டவர்களை தேடும் காவல்துறை

■ சென்னை

ஆன்லைன் வர்த்தகத்தில் இரட்டிப்பு லாபம் பெற்றுத் தருவதாக தொழில் அதிபரிடம் ரூ.2.26 கோடி மோசடி செய்த கும்பலைச் சேர்ந்த 4 பேரை போலீஸார் கைது செய்துள்ளனர்.

சென்னை தி.நகரில் வசிப்பவர் தொழில் அதிபர் கிஷோர். இவரது செல்போன் வாட்ஸ்-அப் எண்ணுக்கு அண்மையில் தகவல் ஒன்று வந்தது. அதில், 'எங்களது வாட்ஸ்-அப் குழுவில் சேர்ந்து நாங்கள் ஆலோசனை கூறும் பங்கு வர்த்தகத்தில் முதலீடு செய்தால் இரட்டிப்பு லாபம் கிடைக்கும்' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதை உண்மையென நம்பிய கிஷோர், அதிக லாபம் தரும் பங்கு வர்த்தக வலைதளத்தில் சேருவதற்காக அவருக்கு வந்த வாட்ஸ்-அப் குழுவில் சேர்ந்துள்ளார். பின்னர் மோசடி நபர்கள் அனுப்பிய லிங்க் (Link) மூலமாக ஆன்லைன் பங்கு வர்த்தக வலைதளத்தில் கிளிக் செய்து, பல்வேறு வங்கிக் கணக்குகளில் பல பரிவர்த்தனைகளில் ரூ.2 கோடியே 26 லட்சம் பணம் அனுப்பியுள்ளார். ஆனால் அவருக்கு லாபமும் கிடைக்கவில்லை, முதலீட்டு பணமும் திரும்ப கிடைக்கவில்லை.

● சத்தியநாராயணன், மணிவேல், ரோஷன், சிம்சன் செல்லதுரை.

இதையடுத்து தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த கிஷோர், இது தொடர்பாக சென்னை மத்திய குற்றப்பிரிவில் உள்ள சைபர் க்ரைம் போலீஸாரிடம் புகார் தெரிவித்தார். அதன் பேரில் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர். முதல் கட்டமாக மோசடி கும்பலின் கூட்டாளிகள் திருநெல்வேலி, தென்காசி பகுதிகளில் பதுங்கியிருப்பது தெரிந்தது. அங்கு விரைந்த தனிப்படை போலீஸார் சத்தியநாராயணன் (60), மணிவேல் (25), ரோஷன் (35) மற்றும் சிம்சன் செல்லதுரை (26) ஆகிய 4 பேரை கைது செய்தனர்.

மோசடி கும்பல் தாங்கள் மோசடி செய்யும் பணத்தை தற்போது கைது செய்யப்பட்ட 4 பேரின் வங்கிக் கணக்குக்கு அனுப்ப வைத்து, அவர்கள் மூலம் பணத்தை தங்களுக்கு அனுப்ப வைத்துள்ளனர். இதற்காக தற்போது கைது செய்யப்பட்ட 4 பேருக்கும் கமிஷன் கொடுத்துள்ளனர். மோசடிக்கு மூளையாக உள்ள கும்பல் வெளிநாடுகளிலிருந்து இயங்கி வருகிறது. அந்த கும்பல் குறித்து சைபர் க்ரைம் போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

உதவி எண் 1930

பொதுமக்கள் யாரேனும் இதுபோன்று இணையவழி குற்றத்தால் பாதிக்கப்பட்டது தெரியவந்தால் உடனடியாக தேசிய இணையவழி குற்றத் தடுப்பு உதவி எண் 1930-க்கு தொடர்புகொண்டு விவரங்களை தெரிவிக்க வேண்டும் அல்லது https.www.cybercrime.gov.in என்ற இணையதளத்தில் புகாரைப் பதிவு செய்ய வேண்டும் எனக் காவல் ஆணையர் அருண் அறிவுறுத்தியுள்ளார்.

பிளஸ் 1 மறுகூட்டல் முடிவுகள் இன்று வெளியீடு

தேர்வுத் துறை அறிவிப்பு

■ சென்னை

பிளஸ் 1 மறுகூட்டல், மறுமதிப்பீடு முடிவுகள் இன்று (ஜூன் 30) வெளியிடப்படும் என்று தேர்வுத் துறை அறிவித்துள்ளது.

இதுகுறித்து தேர்வுத் துறை இயக்குநரம் வெளியிட்ட செய்திக்குறிப்பு விவரம்:

தமிழகத்தில் பிளஸ் 1 வகுப்புக்கான பொதுத்தேர்வு கடந்த மார்ச் மாதம் நடைபெற்றது. இந்த தேர்வு எழுதியவர்களில் மறுகூட்டல், மறுமதிப்பீடு கோரி விண்ணப்பித்தவர்களில் மதிப்பெண் மாற்றமுள்ள மாணவர்களின் பதிவெண் பட்டியல் இன்று (ஜூன் 30) மதியம் வெளியிடப்படுகிறது. அதன் விவரங்களை மாணவர்கள் தேர்வுத் துறையின் www.dge.tn.gov.in எனும் இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம்.

இந்த பட்டியலில் இடம்பெறாதவர்களின் விடைத்தாள்களில் எவ்வித மாற்றமும் இல்லை என்பது தெரிவிக்கப்படுகிறது. மதிப்பெண் மாற்றமுள்ள மாணவர்கள் மட்டுமே மேற்கண்ட தேர்வுத்துறை இணையதளத்தில் இருந்து தங்களுக்கான திருத்தப்பட்ட மதிப்பெண் பட்டியலை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும், அசல் மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்படும் தேதி விவரங்கள் பின்னர் வெளியிடப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

● மாற்று பாலினத்தவர், தன்பாலின ஈர்ப்பாளர்களுக்கான சுயமரியாதை மாதம் ஆண்டுதோறும் ஜூனில் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, 'வானவில் பேரணி' சென்னை எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கம் அருகே நேற்று நடைபெற்றது. படம்: எஸ்.சத்தியசீலன்

முதல்வருக்கு ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் நன்றி

■ சென்னை

விபத்து ஏற்படுத்திய கனரக வாகனங்களை 100 நாட்களுக்கு சிறைப்பிடிக்கும் உத்தரவை ரத்து செய்த முதல்வருக்கு ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அனைத்து ஆம்னி பேருந்து உரிமையாளர் சங்கத் தலைவர் அ.அன்பழகன் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

விபத்து ஏற்படுத்திய கனரக வாகனங்களை 100 நாட்கள் வரை சிறைபிடிக்க வேண்டும் என சென்னை காவல் ஆணையர் வெளியிட்ட உத்தரவைத் தொடர்ந்து அனைத்து ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கம் சார்பாக கடந்த 26-ம் தேதி முதல்வருக்கு கடிதம் வாயிலாக கோரிக்கை வைக்கப்பட்டது.

விபத்துகள் எதிர்பாராதவிதமானது என்பதை உணர்ந்து காவல் ஆணையர் வெளியிட்ட உத்தரவை ரத்து செய்து வாகனங்களை விடுவித்ததற்கு முதல்வருக்கு மனமார்ந்த நன்றி. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ஜூலை 1-ம் தேதி மருத்துவர்கள் தினத்தில்

அரசு மருத்துவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுகோள்

■ சென்னை

ஜூலை 1-ல் மருத்துவர்கள் தினத்தில் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு தமிழக அரசுக்கு அரசு மருத்துவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அரசு மருத்துவர்களுக்கான சட்டப் போராட்டக் குழு தலைவர் மருத்துவர் எஸ்.பெருமாள் பிள்ளை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மருத்துவக் கட்டமைப்பிலும், சுகாதாரத் துறை செயல்பாடுகளிலும் தமிழகம் முன்மாதிரி மாநிலமாக உள்ளது. ஆனால் அதற்கான பங்களிப்பைத் தரும் அரசு மருத்துவர்களுக்கு நாட்டிலேயே குறைவான ஊதியம் தரப்படுகிறது. தகுதிக்கேற்ற ஊதியம் வேண்டி அரசு மருத்துவர்கள் நீண்ட காலமாகவே போராடி வருகிறோம். அதுவும் நாட்டிலேயே தமிழகத்தில்தான் ஊதிய கோரிக்கைக்காக அரசு மருத்துவர் ஒருவர் உயிரையே கொடுத்துள்ளார். சுதந்திர இந்தியாவில் அரசு மருத்துவர்களை தங்கள் ஊதியத்துக்காக போராட வைக்கும் ஒரே மாநிலமாக தமிழகம் இருக்கிறது என்பதுதான் வருத்தமான உண்மை.

2019-ம் ஆண்டு நடந்த போராட்டத்தின் போது, எதிர்க்கட்சி தலைவராக இருந்த தற்போதைய முதல்வர் நேரில் வந்து ஆதரவு தெரிவித்தார். அடுத்து அமையும் திமுக ஆட்சியில் அரசு மருத்துவர்களின் ஊதிய கோரிக்கை நிறைவேற்றப்படும் என உறுதியளித்தார். ஆனால் இன்று வரை கோரிக்கையை அரசு நிறைவேற்றவில்லை.

திமுக ஆட்சி அமைந்த பிறகு 4 மருத்துவர் தினங்களை பார்த்துவிட்டோம். மருத்துவர்களின் சேவையை அங்கீகரிக்கும் வகையில் அரசு எதையுமே செய்யவில்லை. வரும் ஜூலை 1-ம் தேதி மருத்துவர் தினத்தை கடைசி வாய்ப்பாகப் பயன்படுத்தி கொண்டு மருத்துவர்களிடம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற முதல் வரை வேண்டுகிறோம்.

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி கொண்டு வந்த அரசாணை 354-ன்படி அரசு மருத்துவர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டும். கரோனாவால் உயிரிழந்த அரசு மருத்துவர் விவேகானந்தனின் மனைவிக்கு அரசு வேலைக்கான ஆணையை மருத்துவர்கள் தினத்தில், தமிழக முதல்வரின் கைகளால் வழங்க வேண்டும். அரசு மருத்துவ மனைகளின் கட்டமைப்பை தரம் உயர்த்தும் வகையில் போதிய மருத்துவர்கள், செவிலியர்கள் பணியிடங்களை இரு மடங்காக அதிகரிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்

(முன்னர் சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)

பதிவு அலுவலகம் : "சைதன்யா", எண்.12, காதர் நவாஸ் கான் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 006.
தொலைபேசி : 044 - 28332115, இணையதளம் : www.tvsholdings.com
மின்னஞ்சல் : corpsec@tvsholdings.com CIN : L64200TN1962PLC004792

அன்பார்ந்த உறுப்பினர்களே,

1. கம்பெனி விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் செபியினால் அவ்வப்போது வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் மற்றும் செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டு தேவைகள்) விதிகள் 2015 மற்றும் அதன் கீழ் உள்ள விதிகள் மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013-ல் பொருந்தக்கூடிய விதிகளின்படி ஒரு பொதுவான இடத்தில் உறுப்பினர்கள் ஆஜராகாமல் காணொளி வாயிலாக ("VC") அல்லது பிற ஒலி, ஒளி சாதனங்கள் ("OAVM") மூலமாக கம்பெனியின் 63-வது வருடாந்திர பொதுக்கூட்டம் ("AGM") **வெள்ளிக்கிழமை 22 ஆகஸ்ட் 2025 அன்று மதியம் 3.30 மணிக்கு (இந்திய நேரப்படி)** நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
2. கம்பெனி விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் செபி சுற்றறிக்கைகளின்படி, கம்பெனி அல்லது அவர்களின் சம்பந்தப்பட்ட முதலீட்டு பங்கேற்பாளர்களிடம் (டெபாசிட்டரி) மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்த உறுப்பினர்களுக்கு மட்டுமே 63வது வருடாந்திர பொதுக்கூட்டம் மற்றும் 31 மார்ச் 2025-ல் முடிந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைகள் (வருடாந்திர அறிக்கை) ஆகியவை மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும். காணொளி வாயிலாக (VC) அல்லது பிற ஒலி, ஒளி சாதனங்கள் (OAVM) மூலம் மட்டுமே வருடாந்திர பொதுக்கூட்டத்தில் உறுப்பினர்கள் பங்கேற்கலாம். வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் நேரத்தில் மின்னணு வாக்குப் பதிவு மூலமாக வாக்களித்தல் அல்லது தொலைதூர மின்னணு வாக்குப் பதிவின் மூலம் பங்கேற்க மற்றும் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் இணைவதற்கான வழிகாட்டுதல்கள் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் அளிக்கப்படும். கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 103ன் கீழ் குறைந்தபட்ச எண்ணிக்கையை கணக்கிடுவதற்காக காணொளி வாயிலாக (VC) அல்லது பிற ஒலி, ஒளி சாதனங்கள் (OAVM) மூலம் பங்கேற்கும் உறுப்பினர்கள் கணக்கிடப்படுவார்கள். கம்பெனியின் இணையதளம் www.tvsholdings.com.com மற்றும் ஸ்டாக் எக்சேஞ்சுகளான பிஎஸ்இ லிமிடெட் மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட்டின் இணையதளங்கள் முறையே www.bseindia.com மற்றும் www.nseindia.com மற்றும் நேஷனல் செக்யூரிட்டிஸ் டெபாசிட்டரி லிமிடெட்டின் (தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு வசதிக்காக நியமிக்கப்பட்ட முகவர்) இணையதளம் i.e. www.evoting.nsdl.comல் அறிவிப்பு மற்றும் ஆண்டு அறிக்கை பதிவேற்றம் செய்யப்படும்.
3. கம்பெனியிடம் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத, காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் கீழ்க்கண்ட ஆவணங்களின் ஸ்கேன் நகல்களை einward@integratedindia.in என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பி 63வது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பின் நகல்கள், வருடாந்திர அறிக்கை மற்றும், காணொளி வாயிலாக (VC) அல்லது பிற ஒலி, ஒளி சாதனங்கள் (OAVM) மூலம் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் பங்கேற்பதற்கான மற்றும் மின்னணு வாக்குப்பதிவு செய்வதற்கான விவரங்களை பெற்றுக் கொள்ளலாம் :
   a. தங்களது பெயர், ஃபோலியோ எண் / டிபி ஐடி மற்றும் கிளையன்ட் ஐடி, முழு முகவரி, பதிவு செய்ய வேண்டிய மின்னஞ்சல் முகவரியை குறிப்பிட்டு கையொப்பமிட்ட கோரிக்கை கடிதம்.
   b. பங்கு சான்றுகளின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல் (முன் மற்றும் பின் பக்கம்) பொருந்தும் பட்சத்தில்;
   c. சுய சான்றளிக்கப்பட்ட ஸ்கேன் செய்யப்பட்ட பான் மற்றும்
   d. உறுப்பினரின் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கான ஆதாரம் - ஓட்டுனர் உரிமம் / பாஸ்போர்ட் / வங்கி அறிக்கை ஆகியவற்றின் சுயசான்றளிக்கப்பட்ட நகல்கள்.
4. நிறுவனம் / டெபாசிட்டரிகளுடன் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத பங்குதாரர்களுக்கு, 2024-25 நிதியாண்டிற்கான வருடாந்திர அறிக்கையை பெறுவதற்கான இணைய இணைப்பு, கடிதம் மூலமாக அனுப்பப்படும்.
5. மின்னணு கிளியரிங் சேவை மூலமாக தங்கள் வங்கிக் கணக்குகளில் நேரடியாக ஈவுத்தொகையைப் பெறுவதற்கான ஆணையை புதுப்பிக்காத காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் கீழ்க்கண்ட விவரங்கள் / ஆவணங்களுடன், மேற்கண்ட பத்தி 3ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களையும் மின்னஞ்சல் மூலம் einward@integratedindia.inக்கு அனுப்பி, மின்னணு முறையில் அவர்களின் வங்கி கணக்கிற்கு ஈவுத்தொகையை நேரடியாக பெறுவதற்கான அவர்களது மின்னணு வங்கி ஆணையை பதிவு செய்ய வேண்டும்.
   a. ஈவுத் தொகை பெறக்கூடிய வங்கி கிளை, பெயர் மற்றும் வங்கி கணக்கு வகை
   b. கோர் வங்கி தீர்வுகளை அமல்படுத்திய பின்னர் அவர்களுடைய வங்கியால் ஒதுக்கப்பட்ட வங்கி கணக்கு எண்
   c. 11 டிஜிட் ஐஎஃஎஸ்சி குறியீடு மற்றும்
   d. உறுப்பினரின் பெயர் கொண்ட அல்லது கூட்டாக பங்குகளை வைத்திருந்தால் முதல் உறுப்பினர் பெயர் கொண்ட, ரத்து செய்யப்பட்ட காசோலையின் சுயசான்றளிக்கப்பட்ட நகலின் ஸ்கேன்.
6. டீமேட் முறையில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் அவர்களின் டெபாசிட்டரியிடம் அவர்களது மின்னஞ்சல் முகவரிகள் மற்றும் வங்கி கணக்குகளை புதுப்பிக்க வேண்டும்.
7. காகித வடிவில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள் தங்கள் பங்குகளை டீமேட் முறைக்கு மாற்றி அதன் பயன்களை பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
8. டீமேட் கணக்கில் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யும் செயல்முறையைத் தொடங்க பங்குதாரர்களுக்கு பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்களில் குறுஞ்செய்தி அனுப்ப நிறுவனம் NSDL மற்றும் CDSL மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் இந்த வசதியைப் பெறவும், அதற்கேற்ப அவர்களின் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்து கொள்ளவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கம்பெனிகள் விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் செபி சுற்றறிக்கைகளின்படி மற்றும் கம்பெனியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் தகவல் மற்றும் நலனுக்காக மேற்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்டுக்காக
R. ராஜா பிரகாஷ்
கம்பெனி செயலாளர்

சென்னை
ஜூன் 30, 2025